# சாயாவனம் நாவலில் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

## The Soul of the Land: Beliefs and Customs in Sa. Kandasamy's 'Chayavanam'

**ர. விண்ணிலவு[1], முனைவர் அ. மரிய செபஸ்தியான்[2]**

[1]ஆய்வாளர், (23PHD0213) முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.

Email: vinnilavu.r@vit.ac.in, ORCiD:

[2]உதவிப் பேராசிரியர், நெறியாளர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி

விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.

Email: mariasebastin.a@vit.ac.in, ORCiD: https://orcid.org/0009-0001-7269-6217

**R. Vinnilavu,** Research Scholar (23PHD0213), Full-time Ph.D. Research Scholar School of Social Sciences and Languages, VIT University, Vellore.
**Dr. A. Maria Sebastian,** Assistant Professor, Supervisor School of Social Sciences and Languages VIT University, Vellore.

**Abstract:**

The novel Saayavanam highlights the customs and traditions that are deeply rooted in the everyday life of the people, reflecting their culture and social values. Rituals, religious practices, family life, marriage systems, indigenous medicine, modes of worship, and rain-invocation rituals are intricately interwoven with the people's lifestyle. These customs not only fulfilled the needs and beliefs of the community but also strengthened social unity. Through this, the novel portrays the Tamil heritage and the philosophical foundations of their way of life.

**Keywords**: Saayavanam, Customs, Traditions, Worship, Hospitality, Rituals.

**ஆய்வுச் சுருக்கம்:**

சாயாவனம் நாவலில் சுட்டிக்காட்டப்படும் பழக்கவழக்கங்கள், மக்களின் அன்றாட வாழ்வில் ஆழமாகப் பதிந்துள்ள கலாச்சார மற்றும் சமூகப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. மரபுகள், மதச்சடங்குகள், குடும்ப வாழ்க்கை, திருமண முறைகள், மருந்து வழக்கங்கள், தற்சார்ப்பு வாழ்வியல், வழிபாட்டு முறைகள் மற்றும் மழை வேண்டி வழிபடுதல் ஆகியவை மக்களின் வாழ்வியலோடு இணைந்தவையாக்க் காணப்படுகின்றன. இப்பழக்கவழக்கங்கள் மக்களின் தேவைகளையும் நம்பிக்கைகளையும் பூர்த்தி செய்ததோடு, சமூக ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன. இதன் மூலம் சாயாவனம் நாவல், தமிழர் பாரம்பரியத்தையும், அவர்களின் வாழ்வியல் தத்துவத்தையும் சித்தரிக்கிறது.**திறவுச்சொற்கள்**: ஆதியன் இன மக்கள், கல்வி, தொழில், சாதி சான்றிதழ், வாழ்வியல் சிக்கல்.

**திறவுச்சொற்கள்:** சாயாவனம், பழக்கவழக்கங்கள், மரபுகள், வழிபாடு, விருந்தோம்பல், சடங்குகள்.

**முன்னுரை;**

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும், அவை தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வின் பிரதிபலிப்பாகும். அதன்வழியே மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த பல்வேறு பழக்கவழக்கங்கள்

இடம்பெறுகின்றன. இப்பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் முன்னோர்களிடமிருந்தே ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன . அந்தவகையில், மக்களிடையே கடத்தப்படும் பழக்கவழக்கங்கள் தொடர்ந்து கடைபிடிக்கும் போது, அவர்களுக்கேயுரிய தனித்த பண்பாட்டு மரபாக உருப்பெறுகின்றன. இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தின் சமுதாயப் பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்துவன. சமுதாயத்தின் இயல்பிற்கேற்ப உருப்பெறுவதும் காலப்போக்கிற்கு ஏற்ப மாறுபடுவதும் இலக்கியத்தின் இயற்கைப் பண்பாகும். தமிழ் மொழியின்கண் தமிழ்மக்களின் வாழ்க்கை மரபுகளும் இலக்கிய மரபுகளும் ஆழ வேரூன்றி வளர்ந்துள்ளதனைப் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இலக்கியங்களின் வழியே வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வாழ்வியல் மரபுகளை இனங்கண்டு அறிந்துணர்வது பண்பாட்டினை அறிய வாய்ப்பாக அமையும். பண்பாட்டினை அறிவதற்கு இலக்கியச் சான்றுகளே அடிப்படைச் சான்றுகளாக அமையும் நிலையில் அச்சான்றினைப் பிற வாய்வியல் சான்றுகளோடு இணைத்துநோக்கி அச்சமுதாயத்தின் பண்பாட்டினையும் சிறப்பியல்புகளையும் அறிந்துணர்வது சமூகப் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க பணியாகும். அந்நிலையில் இங்கு, சாயாவனம் நாவலில் இடம்பெறும் மக்களின் வாழ்க்கையில் பின்பற்றப்படும் நம்பிக்கைவயப்பட்ட பழக்கவழக்கங்களைக் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பழக்கம் வழக்கம்**

தனிமனிதனின் தேவையின் அடிப்படையில் பழக்கம் தோன்றுகின்றன. அவையே, குறிப்பிட்ட பகுதியில் வாழும் பலருடைய பழக்கம் வழக்கங்களாக மாறும்போது அவர்களுக்கேயுரிய மரபாக உருப்பெறுகின்றன. இது குறித்துக் க. காந்தி தம் நூலில், "பழக்கவழக்கங்களைத் தனிமனிதனும் சமுதாயம் என்ற அமைப்பும் இணைந்து உருவாக்குகின்றன. மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன.'' (தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.பக்.14) எனும் கருத்துப் பழக்கவழக்கம் குறித்த புரிதலை ஏற்படுத்துகிறது. ஆகவே, மக்கள் ஒரு செயலை தேவையினால் தொடர்ந்து பின்பற்றும் பொழுது அச்செயலே, பின் வழக்கமாக மாறி அம்மக்களுக்குரிய தனித்த பண்பாட்டு மரபாக இடம்பெறுகிறது எனலாம். அந்தவகையில் சாயாவனத்தில் வாழும் மக்களும் வாழ்க்கையில் சில பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பதை நாவலின் வழி பின்வருமாறு அறியலாம்.

பொதுவாகச் சில பழக்கவழக்கங்கள் ஒரு தலையினரிடமிருந்து அடுத்தத் தலைமுறையும் பின்பற்றும் போது அதற்கான காரணக் காரியங்களை அறியாமல் அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு ஏற்றுக் கொள்ளும் பழக்கவழக்கங்களால் மரபு தன்மையை இழக்க நேரிடும். இந்த வகையில், இன்றும் மக்களிடம் பல்வேறு பழக்கங்கள் வழக்கத்தில் பின்பற்றுகின்றனர் என்பதும் இயல்பே. அதேபோல், சாயாவனம் நாவலில் இடம்பெறும் சிவனாண்டித் தேவர் தெற்கு திசைப்பார்த்து புளி உலுக்கும் முறையில்,

''புளி உலுக்குவதில் அவருக்கு வரிசை உண்டு. தெற்கிலிருந்து தொடங்கி, தென்கிழக்காய்ப் போய், வடக்கே போவார். ஏனென்று காரணம் சொல்லத் தெரியாது அவருக்கு. அவர் தகப்பனாரும், தாத்தாவும், அவருக்கு முந்தியவர்களும் போன முறையாகும். அந்தச் சுவடு பிசகாமல் சிவனாண்டித் தேவரும் போய்க்கொண்டிருந்தார்.'' (சாயாவனம் – 16) எனும் கருத்திலிருந்து தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து தெற்கு திசையில் தொடங்கி வடக்குத் திசையில் செல்வது வழிவழியாகப் பின்பற்றிவரும் வழக்கமே என்றறிய முடிகிறது.

பழக்கவழக்கங்கள் சில சமூகக் கட்டமைப்புகளை ஏற்படுத்துகிறது. அதுவே, காலப்போக்கில் அம்மக்களுக்குரிய கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. அந்த வகையில், சாயாவனத்தில் வாழும் மக்கள் ஒவ்வொரு குடும்பத்திற்குரியப் புளியமரங்கள் பிரித்தலிக்கப்பட்டு, அம்மரத்திலிருந்து மட்டுமே புளி உலுக்கி எடுத்துக் கொண்டு செல்லும் பழக்கத்தினைக் கடைபிடிக்கின்றனர்.

''ஒவ்வொரு மரத்திலிருந்தும் ஒவ்வொரு குடும்பத்திற்குப் புளி. தெற்கே இருக்கிற தித்திப்புப் புளிய மரத்திலிருந்து புளி சாம்பமூர்த்து ஐயர் வீட்டிற்கு. குட்டை மரத்திலிருந்து பெரிய பண்ணைக்கு. தென்கிழக்கு காத்தவராயன் மரத்துப் புளி பதஞ்சலி சாஸ்திரி வீட்டிற்கு, நெட்டை மரத்துப் புளி பார்த்த சாரதி ஐயங்கார் வீட்டிற்கு, ஒவ்வொரு மரத்தையும் தனித்தனியாக உலுக்குவார். ஒரு மரத்துச் சோட்டானோடு இன்னொரு மரத்துச் சோட்டான் கலக்காது.' (சாயாவனம் – 16) மேற்கண்டவாறு, சாயாவனத்தில் வாழும் மக்கள், தம் வாழ்க்கையில் வழிவழியாகப் பின்பற்றும் குறிப்பிட்ட வழக்கத்தை (புளியை பிரித்துக்கொடுக்கும் வழக்கம் ) நாவலின் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு மக்கள் முன்னோர்கள் கற்றுக்கொடுத்த பழக்கங்களை அடுத்தடுத்துப் பின்பற்றப்படும் போது, வழக்கமாக நிலைத்துவிடுகின்றன. மக்களிடையே இன்றும், பல்வேறு பழக்கவழக்கங்கள் வழக்கத்தில் நிலைத்திருக்கின்றன.

**நாவலில் பளியர் இனக்குழுக்களின் பழக்கவழக்கம்**

சாயாவனத்தில் வாழ்ந்த பளியரின மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்து வந்துள்ளனர். அதேபோல் ஒவ்வொரு குழுக்களுக்கென்று தனிப்பெயரிட்டு அழைத்துள்ளனர். மேலும், ''இனக்குழு வாழ்வுமுறை அழிந்து நிலவுடைமையாக மாறுகின்ற சூழலில் பழைய சமுதாயத்தின் எச்சங்களும் எழுவது இயல்பே, இனக்குழு அழிவு முழுமையாக இராமல் அரைகுறையாக இருந்தால் இனக்குழு மக்களின் சிந்தனைகள் நம்பிக்கைகள், பண்பாட்டு எச்சங்கள் அதற்கடுத்து உருவாகும் சமுதாயத்தில் எஞ்சி நிற்கும்.'' எனும் தேவிபிரசாத் சட்டோவின் கருத்தினைப் பா.பிரபு தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.(பழந்தமிழக இனக்குழு வாழ்வியல்.பக்.3) மேற்கூறிய கருத்தின் வழி ஒரு சமுதாயம் பல்வேறு மாறுதலுக்குப் பிறகும், வாழ்வில் சில பழக்கவழக்கங்கள் அழியாமல் பின்பற்றப்படுகிறது. இந்த வகையில் நாவலில் இடம்பெறும் சிதம்பரத்தின் அம்மா எந்தக்குழுவினை சார்ந்தவர் எனத் தேவர் கேட்டதிலிருந்து, சாயாவனத்தில் வாழும் மக்கள் கூட்டமாக அதாவது குழுவாக வாழ்வதை நூலின் வழி அறிய முடிகிறது.

'வேங்கப் புலி கூட்டமில்லே, உங்கம்மா?''

'மொட்டாணிக் கூட்டம்ன்னு அம்மா சொல்லுவாங்க.''

'ஆமாம்... ஆமாம்... இப்பதான் நினைவு வருது.' (சாயாவனம் – 36) என்று கூறுவதிலிருந்து இனக்குழுக்களாக வாழும் மரபை பின்பற்றியுள்ளதை நாவல் தெளிவுபடுத்துகிறது.

அடுத்ததாக நாவலில் ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களிடையே சாமியாராகப் போகும் வழக்கம் இருப்பதையும் நாவல் எடுத்துக்ககாட்டியுள்ளது. அக்கருத்து,

'அந்தப் பயமவன் வம்சத்திலேயே அப்படியொரு புத்தி; சாமியாராப் போறது வழக்கம். அவன் அப்பன் சாமியாராப் போனான்; தாத்தா போனான். அப்புறம் இந்தப் பயலும் போயிட்டான்.'' (மேலது – 38) மூலம் மொட்டாணிக் கூட்டத்தில் வாழும் மக்கள், திருமணமான கொஞ்ச காலத்திலே சாமியாராகப் போகும் வழக்கம் பின்பற்றியுள்ளதை வெளிப்படுத்துகின்றன. மேலும் இவ்வழக்கம் தலைமுறை தலைமுறையாகத் தொடந்துள்ளதையும் அறியமுடிகிறது. எனவே ஒவ்வொரு இனக்குழுக்களுக்கெனச் சில வழக்கங்களைத் தொடர்ந்து பின்பற்றி வரும்போது அதுவே, நாளடைவில் அவர்களுக்குரிய தனித்த மரபாக எடுத்துக் கொள்ளலாம்.

**விருந்தோம்பல்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவாகும். பழந்தமிழர் பாரம்பரிய பண்புகளில் ஒன்றே விருந்தோம்பல். தம் வீட்டிற்கு வந்த விருந்தினரை அழைத்து மனம் மகிழ்ந்து உணவளிப்பது தமிழர்களின் பண்பாகும். அப்பண்பின் சிறப்பினை இலக்கியங்களின் மூலம் அறியலாம். புறநானூறு பாடல்,

**‘‘நடுகற் கைதொழுது பரவு மொடியாது**
**விருந்தெதிர் பெறுகதில் யானே ’’ - (புறம்.பா.306)**

அடிகள் மூலம் பெண் நடுகல்லைத் தொழுது, இடைவிடாமல் விருந்தினரை நான் எதிர்கொள்ளப் பெறுவேனாக என்பதிலிருந்து சங்க கால மகளின் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகிறது. அவ்வாறே, சாயாவனத்தில் இடம்பெறும் சிவனாண்டித் தேவர் மருமகள் குஞ்சம்மாள் வீட்டிற்கு வந்த சிதம்பரத்தையும் உணவருந்த அழைத்து உணவு வழங்கியமையும் காலம்காலமாகத் தமிழரின் விருந்தோம்பல் பண்பினை வாழ்வின் முக்கியமான ஒன்றாகக் கருதலாம்.

‘உள்ளே வாழைச் சருகில் பிழிந்து வைத்த பழையதும் ஒரு கிண்ணத்தில் கட்டி எருமைத் தயிரும் இருந்தன. இலையின் ஒரு பக்கத்தில் சுண்டக் குழம்பு; இன்னொரு பக்கத்தில் சுட்ட கருவாட்டுத்துண்டு’ (சாயாவனம் – 82) இவ்வரிகள் மூலம் சாயாவன மக்களின் வாழ்வில் விருந்திடும் வழக்கத்தினை அறிந்து அதனைப் பின்பற்றுவதையும் அறியலாம். விருந்தினரை வீட்டிற்கு அழைத்து உணவிடல் என்பது விருந்தோம்பலுக்குரிய முக்கிய வழக்கமாகும். இதுபோன்ற வழக்கம், இப்போதும் தொடர்ந்து மக்களால் கடைபிடிக்கப்படுகின்றன. இவை மனிதர்களின் அறத்தினை வெளிப்படுத்துவன எனலாம். அந்த வகையில், அற இலக்கியமான திருக்குறளில் திருவள்ளுவர் ‘விழுந்தோம்பல்’ எனும் ஒர் அதிகாரத்தையே கொடுத்துள்ளார். மனித வாழ்வில் விருந்தோம்பல் பண்பு சிறந்த வழக்கமாகி விட்டன எனலாம்.

**மருத்துவம்**

இயற்கையோடு இயைந்த வாழ்ந்த மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட காயம், நோய்களுக்கு இயற்கையிடம் இருந்தே குணப்படுத்தும் மருந்தை பெற்றனர். இவை நாட்டுப்புற மருத்துவத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகும். “இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளை உபயோகப்படுத்தும் முறையினால் இம்மருத்துவ முறை இயற்கை என்று பெயர் பெற்றது” (நாட்டுப்புற மருத்துவம் – ஓர் ஆய்வு.ப.18) என இயற்கை மருத்துவத்திற்குக் க,காந்தி தம் நூலில் விளக்கம் அளிக்கிறார். இக்கருத்து இயற்கை மருத்துவத்தினைக் குறித்த புரிதலை நமக்களிக்கின்றது. இவ்வாறு, நாவலிலும் சாயாவனத்தில் வாழும் மக்களும் இயற்கை மருத்துவம் குறித்து அறிந்துள்ளதை, “ஒருவாட்டி எங்க அப்பாவுக்கு ஒரு காயம்; பெரிய அறுவா பட்டுடுச்சு. எங்க அம்மா, நாயுருவியும் பூண்டும் வச்சு, ஒட்ட ஒட்ட அரைச்சுப் போட்டாங்க. ரெண்டே நாளுலே காயம் ஆறிப் போயிடுச்சு.” (சாயாவனம்.ப.59) கருத்தின் வழியே அறியலாம். இக்கருத்திலிருந்து இயற்கை மருத்துவமானது, நாட்டுப்புற மக்களிடம் தற்போதும் வழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகின்றன. இம்மருத்துவம் வாய்வழியாகத் தலைமுறை தலைமுறையாகத் கற்பிக்கப்படுகிறது. இக்கருத்தினை மேற்கூறிய நாவலின் வரிகளின் மூலமே அறிய முடிகிறது. அதாவது தன்னுடைய தாய் தந்தையின் மூலமே எந்த பச்சிலையினால் வெட்டுக் காயத்தைக் குணப்படுத்த பயன்படுத்தலாம் என்றறிகின்றனர். ஆயினும் இக்கால ஓட்டத்தில் அதனை நாடிச்செல்வோர் மிகச் சொர்ப்பமே எனலாம்.

**தற்சார்பு வாழ்க்கை**

சாயாவனத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை இயல்பான மற்றும் ஆடம்பரமற்ற வாழ்க்கையே வாழ்ந்து வந்துள்ளனர். அதனை நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளமை அவ்வாழ்க்கையைப் பலரும் வாழ வேண்டும் என்று ஏங்கும் வகையில் நாவலில் சில காட்சிகளை அமைத்துள்ளார்.

“புளிக்கு, கடைக்குப் போக வேண்டியதில்லை; ஐயர் தோட்டத்தில் உலுக்கித் தேவர் கொண்டுவந்து தருவார். வீட்டுக் கொல்லையில் மிளகாய்ப் பயிராகும். செட்டியார் காணம் போட்டு நல்லெண்ணெய் தருவார்; அதற்குக் கணக்கில்லை. செக்கடிக்குப் போனால், வேண்டுமென்ற வரையில் கொண்டு வரலாம்; கேள்வி முறை கிடையாது. சொந்தக் காணம் மாதிரி.

துணிகளுக்குத்தான் மாயவரம் போக வேண்டும் – பத்து மைல் நடைப்பயணம்; வண்டியில் போனால் செட்டியார் வீட்டு வாசலில் இறங்கலாம். செட்டியார் வீட்டுத் தறி சொந்தத் தறி போல – தேவையான போது வேட்டி, புடவை, துண்டு எடுத்துக் கொண்டு, அறுவடைக்குப் பிறகு, நான்கைந்து பேராகச் சேர்ந்து வண்டியில் நெல் அனுப்புவார்கள். இதற்கெல்லாம் துல்லியமான கணக்குக் கிடையாது; நினைவும் வார்த்தையுந்தான் கணக்கு.” (சாயாவனம்.ப.85) இவ்வாழ்க்கையில் சரியான மற்றும் துல்லியமான கணக்கென்று கிடையாது. அதைப் போல் சொல்லும் வார்த்தையே உண்மை என நம்பினார்கள். அதனாலேயே,

அவர்கள் வார்த்தைகளை நம்பினார்கள். அவர்கள் வாழ்க்கை வாய்ச்சொற்களின் மீது ஆதாரப்பட்டிருந்தது. இதிலிருந்து அவர்களின் வாழ்க்கையில் வழக்கமும் வார்த்தையும் முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது எனலாம். சாயாவனத்தில் பணத்தைக் காண்பதற்கு முன்பு இருந்ததை விட வாழ்வை விடப் பணப்புழக்கம் ஏற்பட்டபின்பு பல இன்னல்களுக்கு ஆட்படுகிறது சாயாவன மக்களின் வாழ்க்கை.

**வழிபாடு**

மனித சமுதாயத்தில் வழிபாடு என்பது மிகவும் இன்றியமையா ஒன்றாகக் கருதப்படுகிறது. மக்கள் பொதுவாக ஒரு செயலைச் செய்வதற்கு முன் முதலில் தங்களுக்குரிய தெய்வத்தின் ஆசீர்வாதம் மற்றும் உதவியை நாடி, அந்தச் செயலில் வெற்றி பெற வேண்டும் என்ற நம்பிக்கை வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது எனலாம். அந்த வகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பதிற்றுப்பத்தில் “இந்தக் கொற்றவையைச் சோ மன்னன் முதலில் வழிபட்டே பின்னர்ப் போர் முதலியற்றில் ஈடுபட்டான் என்னும் குறிப்பும்,

**உருகெழு மரபின் அயிரை பரவியும்**
**கடல் இகுப்ப வேல் இட்டும்**
**உடலுநர் மிடல் சாய்த்தும் (பதிற்.80:19-21)**

எனவரும் அடிகளால் அறியலாகும்.” (சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்.பக்.99.) அந்த வகையில் சாயாவனம் நாவலில் இடம்பெறும் மக்கள் வாழ்க்கையில் பல்வேறு இடங்களில் தங்களுக்குரிய தெய்வங்களை வழிபடுகின்றனர். முதலாவதாக, சிதம்பரம் தான் வாங்கிய காட்டை அழிப்பதற்கு முன், தேவர் முழுமனத்துடன் இஷ்டதெய்வமான மந்தையாவை இருகரம் கூப்பி வழிப்பட்டத்திலிருந்து வழிபாட்டின் நிலையை அறியலாம்.

“அலக்கை, எட்டிய, வசதியான ஒரு முள்ளில் மாட்டிவிட்டுக் கை கூப்பி, மனமொன்றிய நிலையில் மந்தையத் தேவரைத் தொழுதார். அஃது ஒரு மரபு; ஒரு பழக்கம். வேலையைத் தொடங்குவதற்கு முன்னே மனத்திற்குள்ளேயே வழிபாடு. இஷ்டதெய்வம் உத்தரவு கொடுத்துவிட்டது மாதிரி, உடலைச் சிலிர்த்துக்கொண்டு முன்னோக்கிச் சென்றார்.” (சாயாவனம்.ப.93) என்றதன் வழி சாயாவனத்தில் வாழும் மக்கள் ஒரு செயலை தொடங்குவதற்கு முன் தங்களின் குலதெய்வத்தை வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. இதேபோல் ஒரு செயலை தொடங்குவதற்கு முன் தங்களுக்குரிய தெய்வத்தை வழிபடும் முறை சமகால மக்களிடையேயும் காணமுடிகிறது. ஆகவே வழிபாட்டு முறையை,

முதலில் ஒரு தலைமுறையினர் நிகழ்த்த அடுத்தத் தலைமுறையினரும் அதனைப் பின்பற்றும் போது அவர்களுக்கேயுரிய தனித்த மரபு சார்ந்த வாழ்வியல் வழக்கமாகக் கொள்ளலாம்.

**சிறுதெய்வ வழிபாடு**

கிராம்ப்புற மக்கள் சிறுதெய்வ வழிபாட்டில் ஒன்றான குலதெய்வ வழிபாட்டில் மிகுதியாக ஈடுபடுகின்றனர். சிறுதெய்வங்கள் பற்றிச் சு. சக்திவேல் கூறும் கருத்து, ''சிறு தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை(great tradition) நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.'' (நாட்டுப்புற இயல் ஆய்வு.ப.226) வழிபாடு என்பது மக்களின் வாழ்வில் ஒர் அங்கமாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றனது. அதனாலேயே எந்தவொரு செயலை தொடங்குவதற்கு முன்பும் வழிபாடென்பது அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்து விட்டன எனலாம். இக்கருத்திலிருந்து வழிபாட்டின் நீட்சியின் மூலம் மக்களின் பாரம்பரிய பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும் எனலாம்.

இவ்வாறு, சாயாவனத்தில் வாழும் மக்களும் சிறுதெய்வ வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர். காட்டை அழிப்பதற்கு முன்பு தாங்கள் வழிபடும் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி, பற்ற வைக்கும் தீயால் கேடுகள் விளையாவண்ணம் காக்குமாறு வேண்டிக் கொள்கிறார் தேவர். ''பய பக்தியோடு தீயை நோக்கிய தேவர் மேல்துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார்.

''தாயே, மாரி! ஏழைக்காத்தா! மந்தையா! பெரிய கருப்பு! – நீங்க எல்லாம் பக்கத்துணையா இருந்து, ஒரு பங்கமும் வராம காப்பாத்தனும்'' என்று பரவசத்தோடு தீயைத் தொழுதார்.

அவர் கண்கள் மின்னின; முகத்தில் ஒரு பிரகாசம். 'ஹ!' என்ற கூச்சல். உடம்பு சிலிர்த்து. எதிர்பார்த்த உத்தரவு கிடைத்துவிட்டது.

''நம்பச் சாமி சரியின்னுடுச்சுங்க, தம்பி'' என்று தேவர் தீச்சட்டியை எடுத்துக்கொண்டு உள்ளே போனார்.'' (சாயாவனம்.ப.118) என்ற கருத்தின் மூலம் வழிபாடென்பது இயற்கையின் மீதான பயம் கலந்த நம்பிக்கையின் வெளிபாடு எனலாம். அதேபோல் மேற்கூறியவை மக்கள் வழிவழியாகப் பின்பற்றிக்கொண்டு வரும் வழக்கத்தின் ஒரு கூறாகும்.

மேற்கூறியவாறு, சாயாவனத்தில் வாழும் பளியரின மக்கள் சிறுதெய்வங்களான மாரி, ஏழைகாத்தா, மந்தையா மற்றும் பெரிய கருப்பு ஆகியவற்றை வழிபடுவதை நாவலின் வழியே காணமுடிகின்றன. இதன்மூலம் சாயாவனத்தில் வாழும் மக்கள் வழிபாட்டில் தனித்த பழக்கவழக்கத்தையும் பண்பாட்டையும் கொண்டுள்ளதை தெரிந்து கொள்ள முடிகின்றது.

**மழை வேண்டி வழிபாடு**

மழை வேண்டி வழிபாடு என்பது நாட்டில் மழை இல்லாமல் பொய்த்து போகும் போது விவசாயம் மற்றும் மற்ற தேவைகளுக்காக மழைப்பொய்ய வேண்டுமென்று மக்களால் வேண்டிக்கொள்ளும் ஒரு முக்கிய வழிபாட்டு முறையாகும். இம்மழை வழிபாடானது, மக்களால் பல்வேறு முறைகளைக் கொண்டு வழிபடுகின்றனர். மழை வேண்டி தெய்வத்திற்குப் பூசைசெய்து வழிபடும் வழக்கம் தற்போதும் கிராமப்புறங்களில் காணமுடிகிறது. தமிழகமெங்கும் மாரியம்மன் வழிபாடு காணப்படுகிறது. மக்கள் மாரியம்மனை மழையின் கடவுளாக வழிபடுகின்றனர்.

**''ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது**
**மாரிகடன் தீர்த்தவருக்கு மனக்கவலை தீருமம்மா''** (நாட்டுப்புற இயல் ஆய்வு.ப.203) எனச் சு.சக்திவேல் மழை குறித்து நாட்டுப்புற மக்களிடையே இருக்கும் நம்பிக்கையைத் தம் நூலில் குறிப்பிடுகிறார். இக்கருத்தின் வழி 'மழை வேண்டி வழிபடுதல்' மக்களிடையே இருந்துள்ளதை அறியலாம். மேலும் நாவலில், ''அஞ்சு வருஷத்துக்கு முன்னெ, ஒரு வாட்டி மழை இல்லே; மழை

இல்லேயின்னா சுத்தமா மழையில்லே; ஏழு மாசமா. சித்திரை மாசம் போல வெயில் கொளுத்திச்சு. பயிரெல்லாம் கருகிப் போயிடுச்சு. ஆடு மாடுகளுக்குக்கூடத் தண்ணியில்லே. குளம் குட்டையெல்லாம் சுத்தமா வத்திப் போயிடுச்சு. வேண்டாத தெய்வமில்லே; போடாத பூசையில்லே ஆனா, மழை மட்டும் வர்லே. அந்த வருஷம் பொட்டு மழையில்லாம போயிடுச்சு…''(சாயாவனம்.ப.136) என்னும் கருத்தின் மூலம் மழை வேண்டி தெய்வத்தை வழிபடும் வழக்கம் மக்களிடம் இருப்பதைச் சாயாவனம் குறிப்பிடுகிறது. இதன்வழியே மழை வேண்டி வழிபடுதல் என்பது தொடர்ந்து பின்பற்றப்படுவதை இலக்கியங்களினால் அறியமுடிகிறது. இவ்வழிபாடு விவசாயக் கிராமப்புற மக்களிடையே இன்றும் வழக்கத்தில் இருக்கும் ஒரு முறையாகும். எனவே மழையின் தேவையை எண்ணி வாழும் மக்களின் வாழ்க்கையோடு இயைந்த ஒரு வழக்கம் சார்ந்த வழிபாடே எனலாம்.

**இறப்புச் சடங்கு சார்ந்த வழக்கம்**

மனித வாழ்க்கையில் பிறப்பும் இறப்பும் இயற்கையால் நிகழ்வனவாகும். அந்த வகையில், இறப்பின் போது பல்வேறு சடங்குகள் ஒவ்வொரு சமுதாயத்திற்கு ஏற்றவாறு நிகழ்த்தப்படுகின்றன. சடங்குகள் குறித்து, ''தொடக்கக் காலத்தில் கூட்டங் கூட்டமாக வாழ்ந்து வந்த மனிதன் தன்னோடு வாழ்ந்து வந்த மற்றொரு மனிதன் திடீரென்று இறந்ததைக் கண்டு பயந்தான். ஆகவே அவ்வாறு ஏற்படும் பயத்தைப் போக்கிக்கொள்ளப் பலவகைச் சடங்குகளைச் செய்யத் தொடங்கினான்.''(தமிழ் மரபில் மரணச் சடங்குகள்.பக்.15.) கூறும் கருத்தின் மூலம் இறப்புச் சார்ந்த சடங்குகள் காலம்காலமாகப் பின்பற்றும் போது நம்பிக்கை சார்ந்த வழக்கமாக மாறுகின்றது எனலாம். மேலும் தமிழர்களின் இறப்புச் சடங்கில் 'ஒப்பாரி பாடல்கள்' பாடும் வழக்கமும் உண்டு. கிராமப்புறத்தில், நல்ல காரியங்களுக்குக் கலந்து கொள்ளா விட்டாலும் தவறில்லை, ஆனால் துக்கத்துக்குக் கலந்துக்கொள்ள வேண்டும் என்பார்கள். அவ்வாறு சாயாவனம் நாவலில் இறப்புச் சார்ந்த சடங்குகளில் ஒன்றான கோடி எடுத்து வரும் சடங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்துச் சி.சுந்தரேசன் தம் கட்டுரையில், ''கணவன் இறந்தாலும் மனைவி இறந்தாலும் பெண்ணின் தாய் வீட்டிலிருந்து இறுதிச் சடங்கு செய்யும் வழக்கம் உள்ளது. இதை, பொறந்த இடத்துக் கோடி என்று கூறுவார்கள். அதில் நெல், அரிசி, மஞ்சள், குங்குமம், வளையல், தலைக்குப்பூ, எண்ணெய், சீயக்காய், பச்சை மட்டை (கீத்து) போன்றவற்றை எடுத்து வருவார்கள். கோடிக்குப் பெறும்பாலும் மல்லுத்துணியைத் தான் எடுத்து வருகின்றனர்.''(இறப்புச் சடங்குகள்.) என விளக்கியுள்ளார்.

''ஏழு மாதக் கர்ப்பிணியான அன்னகாமு ஜீரத்தால் காலமானாள். ஐந்து நாள் ஜீரம், அவள் மூச்சை அடக்கிவிட்டது. இங்கேயே ஊர் முழுவதும் வந்து குழுமியிருக்கிறது!

நடுப்பகலுக்குச் சற்றுப் பின்னர் அன்னகாமுவின் பெரியண்ணன், செட்டியார் வீட்டிலிருந்து கோடி எடுத்து வந்தான். முரட்டுச் சிவப்புச் சேலை. அவன் கையில் கொடுக்கும் போது செட்டியார் குலுங்கக் குலுங்க அழுதாராம். கல்யாணத்திற்கு, விலையுயர்ந்த தாழாம்பூக் கரையிட்ட மஞ்சள் புடவையைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவர் அவர்தான். வருஷம் ஒன்றரை ஆகவில்லை; கடைசிச் சேலை தருகிறார்.'' (சாயாவனம்.ப.109) இவ்வடிகளால் இறந்தவர்களுக்குக் கடைசியாகப் புது வேட்டி, சேலை கொடுப்பதைக் கோடி என்று சொல்வது அறிய முடிகிறது. இவ்வழக்கம் மக்களிடையே இன்றும் புழக்கத்தில் இருக்கின்றது. மேலும் இறப்புக் குறித்த புரிதலை இரண்டே வரிகளில் நாவலில் குறிப்பிட்டுள்ளமை சிறப்பே,

''என்ன விசித்திரம்! ஒன்றின் அழிவு தீயினிடமும், இன்னொன்றின் அழிவு மனிதர்களிடமும் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது! (சாயாவனம்.ப.117). தொடர்ந்து காலம்காலமாக மக்களிடம் பின்பற்றி

வரும் பல வழக்கங்களால் உறவுகளிடையே நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன. வாழ்க்கைக்கு உகந்த வழக்கங்களைச் சேகரிப்பதும் காப்பதும் சமூகத்தில் வாழும் அனைவரின் சமூகக் கடமையாகும்.

**பண்டமாற்று முறை**

பண்டமாற்று முறை என்பது, ஒரு பொருளைக் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய மற்றொரு பொருளை பரிமாறிக் கொள்ளும் பழங்கால முறையாகும். இம்முறை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலத்தில் வாழும் மக்களிடையே பழக்கத்தில் இருந்துள்ளது. அந்தவகையில், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத்தில் வாழும் உப்பு வணிகர் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டு போனார்கள் என்று நற்றிணைப் பாடல் கூறுகிறது.

**''தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி'' (நற்.183.1-2)**

இவ்வடிகள் மூலம் மருதநிலத்தில் வாழும் வணிகர்கள் தமது நாட்டில் விளைந்த வெண்ணெல்லை வண்டிகளில் ஏற்றிச் சென்று விற்று அதற்கு மாற்றாக நெய்தல் நிலப்பகுதியில் விளைந்த உப்பினைப் பெற்றுத் தமது நாட்டுப்பகுதியில் விலைகூறி விற்பர் என்றறியலாம். மக்கள் ஒரு பொருள் கொடுத்து வேண்டிய மற்றொரு பொருளைப் பெற்றுக் கொள்ளும் பண்டமாற்றுமுறை பண்டைய காலத்தில் இருந்தே வழக்கத்தில் இருந்துள்ளதை அறியலாம். மயிலை சீனி. வேங்கடசாமி தம் நூலில், ''சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருட்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்றுச் செய்து கொண்டார்கள். பெரிய பட்டினங்களிலும் நகரங்களிலும் காசு கொடுத்துப் பொருளை வாங்கும் முறை இருந்தபோதிலும் ஊர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது.'' (பழங்காலத் தமிழர் வணிகம்.பக்.12). இவ்வாறே சாயாவனத்தில் வாழும் மக்களும் தங்கள் வாழ்வில் பண்டமாற்று முறையில் பொருட்களை வாங்கியுள்ளதை நாவலின் மூலம் அறிய முடிகின்றனது . அச்செய்தி,

''முணுமுணுத்துக் கொண்டிருந்த பாட்டியைப் பார்த்துச் சிதம்பரம், 'இப்படி வாங்க, பாட்டீ; உங்களுக்கு என்ன வேணும்.?'' என்று கேட்டான்.

''இஞ்ச பாருங்க, தம்பி. பதக்கு நெல்லு இருக்கு. அளந்து கிட்டு ஒரு சேர் நல்லெண்ண; ரெண்டுபடி கொத்தமல்லி கொடுன்னா, பய, 'காசு கொண்டா; இஞ்ச நெல்லு எடுத்துக்க மாட்டேங்'கறான்.''

பணத்தை வாங்கிக்கொண்டு சாமான்கள் கொடுக்கக் கோமுட்டிச் செட்டியும், அப்துல் காதர் ராவுத்தரும் முன்வரவில்லை. பணம் கொண்டு போனவர்களையெல்லாம், 'நெல்லு கொண்டாங்க; இந்தச் சனியன் வேணாம்'' என்று விரட்டியடித்ததார்கள். (சாயாவனம்.ப.175) என்னும் கருத்தின் வாயிலாகப் பணம் என்பது மக்களிடம் புழக்கத்தில் இல்லாத காலகட்டத்தில், பெரும்பாலும் பண்டமாற்று முறையைப் பின்பற்றியதை இதனால் அறிய முடிகின்றது. இக்காலகட்டத்தில் நகர்புறத்தில் இப்பழக்கம் இல்லாவிட்டாலும் நாட்டுப்புறத்தில் அதாவது கிராமங்களில் வழக்கத்தில் இருப்பதைப் பார்க்கலாம். இப்பண்டமாற்றத்தால் மக்களிடையே நல்லுறவு ஏற்படுத்தும் வழக்கம் எனலாம்.

**முடிவுரை**

சாயாவனம் நாவல், தமிழ்ச் சமூகத்தில் தொடர்ந்துவரும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பதிந்து வைத்துள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்க்கைமுறை, இனக்குழுக்களாக வாழும் பழக்கம், விருந்தோம்பல் பண்பு, இயற்கை மருத்துவம், வழிபாடு, மழை வேண்டல், இறப்புச் சடங்குகள் மற்றும் பண்டமாற்று முறை போன்றவை, அந்தச் சமூகத்தின்

அடையாளமாகவும் வாழ்வின் ஓர் அங்கமாகவும் இருந்து வருகின்றன. முன்னோர்கள் கடைபிடித்து வந்த நம்பிக்கைகள், சிலவற்றின் காரணங்களை அறியாமல் இன்றும் தொடரும் நிலையில் இருக்கின்றன. ஆனால் அவை மக்களிடையே ஒற்றுமையும், மரபினை பிழையாமலும் பாதுகாத்து வருகிறது. இதன்வழி, ஒவ்வொரு நம்பிக்கையும், பழக்கவழக்கமும், வாழ்வியல் அனுபவங்களின் கூறாகவும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் ஊக்கமாகவும் இருந்து, அந்தச் சமூகத்தின் பண்பாட்டையும் வாழ்வியலையும் விவரிக்கிறது.

சாயாவனம் நாவல் வழியே, தமிழரின் வாழ்வியல் மரபுகளையும், சமூகப் பண்பாட்டு நிலைகளையும், பண்பாட்டு அடையாளங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. காந்தி.க, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600113.
2. கந்தசாமி.சா, சாயாவனம், காலச்சுவடு பப்ளிகேஷன் (பி) லிட்., திருநெல்வேலி-629001.
3. பிரபு.பா, பழந்தமிழக இனக்குழு வாழ்வியல், https://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/42594-2021-09-12-03-41-24.
4. செல்வராசு.அ, சங்க இலக்கியம் உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 12 புறநானூறு தொகுதி - 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600050.
5. சாந்தி.ச, நாட்டுப்புற மருத்துவம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்-613005.
6. சண்முகம் பிள்ளை.மு, சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600113.
7. சக்திவேல்.சு, நாட்டுப்புற இயல் ஆய்வு,
8. இரத்தினதேவி மதியாபரணம் (தொகுப்பு), சைவ தமிழ் ஆன்மிகப் பணியாளர் திட்ட வெளியீடு.
9. சுந்தரேசன்.சி, இறப்புச் சடங்கு https://www.tamilvu.org/tdb/titles_cont/folklore/html/death%20ritual.htm
10. பாலாஜி.க, நற்றிணை உரைவேறுபாடு தொகுதி-1, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., இராயப்பேட்டை, சென்னை – 14.
11. வேங்கடசாமி.மயிலை சீனி, பழங்காலத் தமிழர் வணிகம் (சங்க காலம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600098.


**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

tamilmanam